DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

(In the Court of Judicial Magistrate Court,  Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : CrlmP.No.287/2026 |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : முத்துபாண்டியன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 18.05.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 18 May 2026.

மனுதாரர் மற்றும் வழக்கறிஞர் ஆஜர். எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்யப்பாட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிர் வழக்கறிஞர் ஆஜர்.

**முதல்விசாரணை:**

நான் தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தாலுகா கோதைநாச்சியார்புரம் என்ற கிராமம் எனது பூர்விகமாகும். நான் தற்போது சென்னை மாநகரில் உள்ள மயிலாப்பூரில் உள்ள பாபநாசம் சிவன் சாலையில் உள்ள CID காவல் குடியிருப்பில் R12, என்ற முகவரியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரி திரு.T. காந்திகுமார் வழக்கறிஞர் என்பவர் சங்கரன்கோவில் வழக்கறிஞர் சங்கத்தில் முக்கிய

பொருப்பில் உள்ளார். எனது சொந்த சிவில் வழக்கை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.20/2025 வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. மேற்படி அசல் வழக்கின் எதிரி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞராக உள்ளார். மேற்படி அசல் வழக்கானது எனது தகப்பனாரின் உடன் பிறந்த சகோதரர் திரு. செல்லசாமி என்பவருக்கும் எனக்கும் சம்மந்தப்பட்ட வழக்காகும். மேற்படி அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பில் கு.வி.மு.சா.340 (BNSS 379-ன் படி ) மனுதாக்கல் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில் மாண்பமை முதன்மை சார்பு நீதிமன்றம் அந்த மனு சம்மந்தமாக சங்கரன்கோவில் குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களை விசாரணை செய்யுமாறு சார்பு நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது. மேலும் சார்பு நீதிமன்றம் போட்ட உத்தரவு மற்றும் எதிரி காந்திகுமார் பதிவிட்ட வீடியோ பதிவில் சொல்லப்பட்ட சங்கதிக்கு தொடர்பான சில ஆவணங்களை தென்காசி மாவட்ட பொது தகவல் அலுவலர் மற்றும் மாவட்ட பதிவாளர் அலுவலகம், அவர்களுக்கு தகவல் அறியும் உரிமைச்சட்டம் பிரிவு 6(1)-ன் படி வழக்கு சம்மந்தமான ஆவணங்களை கேட்டு மனுதாக்கல் செய்திருந்தேன். அதன் அடிப்படையில் தென்காசி மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் இருந்து ந.க.எண். 499/2025 மற்றும் 2-வது தகவல் அறியும் உரிமைச்சட்ட மனு ந.க.எண்.1765/2025 மற்றும் தென்காசி பதிவு மாவட்டம் உருவாக்கப்பட்டது. மேற்படி தகவல் அறியும் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தகவலின் படி எனது தகப்பனார் 13.04.2013-ம்ஆண்டு L. குருவம்மாள் முத்திரை விற்பனையாளர் கரிவலம்வந்தநல்லூர் தென்காசி மாவட்டம் அவர்களிடம் ஆவணம் வாங்கப்பட்டது. அன்றைய தேதியில் திரு. ரமேஷ் கொத்தன்குளம் அவர்களும் மேற்படி முத்திரை ஆவணத்தை வாங்கினார். ஆவண எண். 1026/2013 ரமேஷ் 18

கொத்தன்குளம் சார்பதிவளார் கரிவலம்வந்தநல்லூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை நான் நகல் மூலம் பெற்றுக்கொண்டேன். மேற்படி ஆவணத்தில் தென்காசி மாவட்டம் என்றே உள்ளது. இவ்வாறான சட்டப்பூர்வமான ஆவணங்கள் உள்ள நிலையில் எதிரி காந்திகுமார் வழக்கறிஞர் என்பவர் நான் போலியாக தென்காசி மாவட்டம் என்று போலியாக சீல் உருவாக்கியதாக உண்மைக்கு புறம்பாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் மேற்படி வீடியோ வெளியிட்டார். மேற்படி முதன்மை சார்பு நீதிமன்ற உத்தரவை எதிர்த்து நான் மாண்பமை முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தேன், அந்த மனுவோடு மேற்படி தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் வாங்கிய ஆவணங்கள் அனைத்தும் மேற்படி வழக்கில் தாக்கல் செய்து அந்த மனுவிற்கு 52/2025 என்ற எண் வழக்கப்பட்டு அந்த எண்ணில் மாண்பமை நீதிமன்றம் சார்பு நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டது. இந்த இடைப்பட்ட காலத்தில் எதிர் காந்திகுமார் என்பவர் என்னை பொது வெளியில் அவதுறு ஏற்படுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு, என்னை மிரட்டும் மற்றும் அச்சுறுத்தும் வகையில் ஒரு தொலைக்காட்சியில் பேட்டி கொடுப்பது போன்று ஒரு வீடியோவை தயார் செய்து அந்த வீடியோவை எனது நெருங்கிய உறவினர், நண்பர்கள், என்னுடைய துறை சார்ந்த அதிகாரிகள் ஆகியோர்களுக்கு அந்த வீடியோவை Forwad செய்தார். அதுமட்டுமல்லாமல் அந்த வீடியோவை எடுத்து கொண்டு சென்னையில் உள்ள நான் பணிபுரியும் உயர் அதிகாரிகளை சந்தித்து என்னை பணி நீக்கம் செய்ய வேண்டும் என்ற உள்நோக்கத்தில் செயல்பட்டார். மேற்படி வீடியோவில் என்னை பணிநீக்கம் செய்வேன் என்று குறிப்பிட்டு வீடியோ பதிவு செய்தார்.

மேற்படி வீடியோவில் நான் எனது சொந்த கிராமத்தில் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்ததாக குறிப்பிட்டு பேட்டி அளித்துள்ளார். இது சம்மந்தமாக நான் மேற்படி வழக்கறிஞர் காந்திகுமார் மீது நடவடிக்கை எடுக்க கோரி தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுண்சில் புகார் மனு கொடுத்து அந்த புகார் மனு எண்.38/2026 என்ற எண்ணில் விசாரணையில் இருந்து வருகிறது. மேற்படி காந்திகுமார் வெளியிடப்பட்ட வீடியோ மூலம் எனக்கும் என் மனைவி, என் குழந்தைக்கு, என் உறவினர்கள் ஆகியோர்களுக்கு மனவுளைச்சல் ஏற்பட்டது. மேற்படி எனது துறைசார்ந்த சிறப்பான பணியினால் எனக்கு துறைசார்ந்த அதிகாரி, அதோடு தொடர்புடைய பிற துறை உயர்அதிகாரிகளால் நான் மிகவும் கடமை உணர்ச்சி உள்ளவன் என்றும் நேர்மையானவன் என்றும், பணியில் சுருசுருப்பானவன் என்றும் எனக்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளார்கள்(மேற்படி புகார் தாரரின் வேண்டுகொள்ளுக்குகினங்க அந்த நற்சான்றிதழ் குறியீடு செய்யவில்லை). ஆனால் மேற்படி காந்திகுமாரின் செயலால் என் பெயருக்கு கலங்கம் ஏற்பட்டுள்ளது. எனவே, சட்டத்திற்கு புறம்பாகவும், உண்மைக்கு புறம்பாகவும் என்னை அச்சுறுத்த வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு மிரட்டும் தொனியில் அவதூறு செய்யவேண்டும் என்ற உள்நோக்கத்தோடு பொது வெளியில் வீடியோ வெளியிட்ட எதிரி திரு. காந்திகுமார் வழக்கறிஞர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்படி வழக்கறிஞர் எதிரி காந்திகுமார் என்பவர் என்னை பற்றி அவதுறாக பேசிய வீடியோ என் மொபைலுக்கு கிடைகக்கப்பேற்று அதனை நான் எந்தவித சேர்கையோ, மாற்றமோ, திருத்தமோ, செய்யாமல் அந்த வீடியோவை என் மொபைல் போனிலிருந்து பென்ரைவில் மாற்றம் செய்து அதற்கு இந்திய சாட்சிய சட்டம்

65(b) சான்றிதலுடன் பென்ரைவை தாக்கல் செய்கிறேன். **அந்த பென்ரைவ் ம.சா.ஆ.1 ஆகும், நான் கடந்த 19.09.2025-ல் ந.க.எண். 4999/இ.5/2025 த.அ.உ.ச.ம.எண்.177/2025-ன் கீழ் பெற்ற தகவல் நகல் ம.சா.ஆ.2 ஆகும். நான் கடந்த 24.04.2025 அன்று தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் எனக்கு கிடைக்கப்பெற்ற தகவல் கடிதம் நகல் ம.சா.ஆ.3 ஆகும். நான் கடந்த 11.10.2025 அன்று எனக்கு கிடைக்கபெற்ற ஆவண எண். 1026/2013 ஆவணத்தின் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4 ஆகும். நான் கடந்த 19.01.2026 அன்று மேற்படி எதிரி மீது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுண்சிலில் கொடுத்த புகார் மனு மற்றும் பார் கவுண்சிலில் எனக்கு வழங்கி ஒப்புகை கடிதம் நகல் ம.சா.ஆ.5 ஆகும்.** ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.5 ஆகிய ஆவணங்கள் எதிரி தரப்பு ஆட்சியேபணையுடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.